பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 22 செவ்வாய்க்கிழமை 05.04.2022 கதிர் 151

**இனி இது ரகசியம் அல்ல!**

இந்தப் பத்தி எழுதப்படும் இந்த நேரம் வரை – நேற்று நள்ளிரவு வரை – நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கான அறிவிப்பையோ உத்தரவையோ ஜனாதிபதி விடுக்கவில்லை. அதனால் நாடாளுமன்றம் இன்று திட்டமிட்டபடி காலையில் 2

## பெரும்பான்மையை நிரூபிக்கும் கட்சிக்கு ஆட்சியை ஒப்படைப்பதற்கு நான் தயார்!

### ஜனாதிபதி கோட்டாபய அதிரடி

நாடாளுமன்றத்தில் உள்ள ஏதேனும் கட்சியொன்று சாதாரண பெரும்பான்மையை (113) நிரூபித்தால் ஆட்சியை ஒப்படைப்பதற்குத் தான் தயார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

– இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டமொன்றின் 11

## இ.தொ.காவுடன் கோட்டா நேற்று முக்கிய சந்திப்பு!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி 11

# கோட்டா அரசுக்கு எதிராக நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!

**பிரதான வீதிகளை மறித்தும் மக்கள் நள்ளிரவு வரை போராட்டம்**
**ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை முன் பதற்ற நிலைமை**



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அரசும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரி நாடெங்கும் மக்கள் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. நேற்றுக் காலை முதல் மக்கள் வீதிகளில் இறங்கி ஆரம்பித்த ஆர்ப்பாட்டங்கள் நள்ளிரவு வரை தொடர்ந்தன. 11

## கோட்டாபய உடனடியாக பதவி விலக வேண்டும்!

### அநுரகுமார வலியுறுத்து



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கஎம்.பி. வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:- 11

## ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஐவரின் வீடுகள் முற்றுகை

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் ஐவரின் வீடுகளுக்கு முன்னால் மக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 11

## 'மொட்டு' அரசிலிருந்து வெளியேறுகிறது சு.க.

**மைத்திரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம்**



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு அரச 2



### உயர்நீதிமன்றத்தில் 8ஆம் திகதி

## மஹிந்தர் உள்ளிட்ட தரப்பினரை முன்னிலையாகுமாறு அறிவித்தல்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரை உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் உடனடி நடவடிக்கைஎடுக்குமாறு அமைச்சரவைக்கு உத்தரவிடுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களுக்கு அமைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 42 பேரை 11

## அவசரகால நிலையை எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் மனு!

அவசரகால நிலைப் பிரகடனம், கடந்த சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் சமூக ஊடகங்களை முடக்கிய நடவடிக்கை ஆகியவற்றை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை 2

## ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்தன எதிர்க்கட்சிகள்

அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டு தற்போது ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண அனைவரும் முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று விடுத்த அழைப்பை பிரதான எதிர்க்கட்சிகள் நிராகரித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உள்ளிட்ட கட்சிகளே ஜனாதிபதியின் அழைப்பை இவ்வாறு நிராகரித்துள்ளன. 2

## சாதாரண பெரும்பான்மையை இன்று இழக்கும் கோட்டா அரசு

### கம்மன்பில எச்சரிக்கை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, நாடாளுமன்றத்தில் இன்று சாதாரண பெரும்பான்மையையும் (113) இழக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில.

நாடாளுமன்றக் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சபாநாயகர் தலைமையில் கூடும் என நம்பலாம். பிரதமர் மற்றும் நான்கு அமைச்சர்கள்தான் அரசு பக்கத்தில். ஆளும் தரப்பில் எத்தனை பேர் இருப்பர், எதிர்ப் பக்கத்தில் எத்தனை பேர் இருப்பர், தனிக் குழுவாக எத்தனை பேர் அமர்வர் என்பவையெல்லாம் தெரியாது. பக்கம் பார்க்காமல் கலந்து இருக்க வேண்டியதுதான்.

அரசுத் தரப்புக்குப் பெரும்பான்மை இல்லை என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி, அதனால் பிரதமரைப் பதவி விலகக் கோரி, எதிர்க்கட்சிகள் நிச்சயமாக இன்று தாண்டவமாடும்.

ஆனாலும் ஆளும் தரப்பில் இருந்து பிரிந்து, தனிக் குழுக்களாக இயங்கும் முடிவில் இருக்கும் விமல் வீரவன்ஸ – உதய கம்மன்பில தரப்பின் 16 எம்பிக்களும், சுதந்திரக் கட்சியின் 14 எம்.பிக்களும் ஆளும் தரப்புக்கு எதிராக வாக்களிக்கும் நிலைப்பாட்டுக்கு வரும்வரை தற்போதைய அரசு கவிழும் நெருக்கடி இருக்காது.

225 எம்.பிக்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் 113 பேரின் ஆதரவுடன் (தனித்து அறுதிப் பெரும்பான்மையுடன்) யார் வந்தாலும் அவர்களிடம் அரசை ஒப்படைப்போம் என்று ஜனாதிபதி தரப்பில் கூறப்படுகின்றது.

அந்தக் கூற்றில் இரண்டு விடயங்கள் பொதிந்துள்ளன.

ஒன்று – அந்தப் பெரும்பான்மை தமது அரசிடம் இப்போது இல்லை என்பதை ஜனாதிபதியே ஒப்புக்கொள்கின்றார் என்பது.

அடுத்தது – அதை,அதாவது 113 உறுப்பினர்களின் ஆதரவை, ஆளும் தரப்புக்கு எதிராகக் கறுவிக் கொண்டிருக்கும் எதிர்க் கட்சிகளும் ஒன்றுபட்டு கொண்டு வர முடியாது என்பது.

அதுதான் நிலைமை.

ஆளும் தரப்பு பெரும்பான்மையை இழந்து விட்டது. ஆனால் மாற்றுத் தரப்பு எதுவும் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் வாய்ப்பும் இல்லை.

அரசை எதிர்க்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரின் தரப்பும், சுதந்திரக் கட்சித் தரப்பும் ஒன்று சேர்ந்து இயங்க முன்வரலாம். ஆனால் அவற்றுடன் கூட்டுச் சேர்ந்து புதிய ஆட்சியை அமைக்கும் எண்ணம் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடையாது. மற்றொரு பிரதான எதிர்க்கட்சியான ஜே.வி.பி. அல்லது தமிழ்க் கூட்டமைப்புக் கூட அத்தரப்புகளுடன் சேரா. எனவே, இப்போதைய அரசு பெரும்பான்மையை இழந்தாலும், இன்னொரு தரப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் அரசு அமைக்கும் நிலைமையும் இல்லை. ஆகவே, தற்காலிக ஏற்பாடாக இருக்கின்ற அரசு அறுதிப் பெரும்பான்மையின்றியே ஆட்சி அதிகாரத்தில் தொடர வேண்டியதுதான்.

அத்தகைய பலவீனமான அரசினால் நாட்டில் எழுந்துள்ள மக்கள் எழுச்சிக்கு முகம் கொடுத்து உய்ய முடியுமா என்பது தான் கேள்வி. மக்கள் எழுச்சியைக் கோட்டா அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கும் நிலைமையும் தாண்டி விட்டது என்றே தோன்றுகின்றது. பொலிஸாரும் முப்படையினரும் அத்தகைய பணிக்குப் பயன்படுத்தப்படக்கூடிய கட்டுப்பாட்டிலும் மனநிலையிலும் இல்லை என்பதும் துலாம்பரமாகத் தென்படுகின்றது.

போதாக்குறைக்கு தலைநகரிலும், ஊர்களிலும் உள்ள அமைச்சர்கள், அரச தரப்பு எம்.பிக்களின் வீடுகளை இரவிரவாகத் தேடித் தேடி மக்கள் தாக்கும் படலமும் ஆரம்பித்திருப்பதால் அவை எல்லாவற்றுக்கும் பெரும் எண்ணிக்கையில் பொலிஸாரையும் படையினரையும் காவலுக்கு நிறுத்த வேண்டிய இக்கட்டு ஆட்சித் தலைமைக்கு.

இத்தகைய அரசியல் சூழ்நிலையைச் சரியான முறையில் பிரதான எதிர்க்கட்சிகள் பயன்படுத்த வேண்டும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு இத்தகைய சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தக் கூடிய அரசியல் முதிர்ச்சி இருக்கின்றதா என்பதுதான் கேள்வி.

குழம்பிப் போய் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் அதிகாரத் தரப்புடன் ஏதேனும் ஓர் உடன்பாட்டுக்கு வந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை சேர்ந்து நின்று ஒழிப்பதற்கான வரலாற்று வாய்ப்பு இது.

கோட்டாபய தடுமாறுகிறார், எனவே, அடுத்த ஜனாதிபதி நான்தான் என்ற நப்பாசை கொண்டு, அதை எதிர்பார்த்து, நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கும் அரசியல் கற்றுக்குட்டித்தனமாக நடக்காமல், அரசியல் முதிர்ச்சியை சஜித் பிரேமதாஸ காட்ட வேண்டிய தருணம் இது.

ஜனாதிபதி கோட்டாபயவுக்கு இன்னும் இரண்டரை வருட ஆட்சிக் காலம் இருக்கின்றது. பதவியை இடையில் துறப்பதானாலும் இன்றைய நிலையில் கௌரவமான முறையில் வெளியேறவே அவர் விரும்புவார்.

அவர் எதிர்கொள்ளும் இன்றைய நெருக்கடியில் அவரையும், நாட்டையும், ஜனநாயக ஆட்சி முறைமையையும் காப்பதற்கு ஒரே வழி நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தான் என்பதை அவருக்கு உணர்த்தி (வேறு வழியில்லாதமையால் அதற்கு அவர் இணங்கியேயாகவேண்டும்),காலம் குறிப்பிட்ட ஒரு திட்டத்தை வரைந்து, அதன் அடிப்படையில் அவருடன் சேர்ந்து செயற்பட்டு, அதனை (நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும்) பணியை ஒப்பேற்றலாம். அதற்கு வளைந்து கொடுக்க வேண்டிய கட்டாயத்தில்தான் கோட்டாபய இப்போது இருக்கிறார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் திட்டத்தின் நடைமுறையாக்கமாக உத்தேச இடைக்கால அரசில் அல்லது காபந்து அரசில் ஐக்கிய மக்கள் சக்தி பங்களிக்க முடியும்.

இந்த விடயத்தில் நம்பிக்கைக்குரிய மூன்றாம் தரப்பு ஒன்று ஏற்பட்டாளராக – அனுசரணையாளராக – இருக்கலாம்.

தமிழர்கள் – முஸ்லிம்கள் – மலையகத் தமிழர்கள் – இணைந்த சிறுபான்மையினப் பிரதிநிதிகள் தரப்புகள் கூட ஒன்றிணைந்து, அந்த அனுசரணைப் பணியை ஆற்ற முடியும்.

20ஆவது திருத்தத்தை நீக்குவதை மட்டுமல்ல, முழுமையாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கச் செய்வதற்கான அற்புதமான வரலாற்று சந்தர்ப்பம் இது.

முடியுமானால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழித்தல், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இணக்கம் போன்றவற்றையும் இந்த நிகழ்ச்சி திட்டத்துடன் சேர்த்துக்கொள்ள முடியும்.

இவ்வளவும் எனது பட்டறிவின் – அனுபவத்தின் – விளைவான பகிர்வுகள். ஆலோசனைகள். அரசியல் தெரிந்த – புரிந்த – தரப்புக்கள் பயன்படுத்த முனையலாம். அவ்வளவுதான்.

– மின்னல் –

## 'மொட்டு' அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற சு.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் சுதந்திரக் கட்சி ஊடாகவே நாடாளுமன்றம் தெரிவானார். அவரும் அரசிலிருந்து வெளியேறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அத்துடன், அமைச்சுப் பதவிகளைத் துறந்து நாடகம் ஆடாமல், இந்த அரசு உடன் பதவி விலக வேண்டும் எனவும் மேற்படி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

கோட்டா அரசின் கீழ் இடைக்கால அரசு மட்டுமல்ல, எந்த அரசு வந்தாலும் அதில் அங்கம் வகிக்க எமது கட்சி தயார் இல்லை என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீறல் மனுக்கள் இரண்டு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டன.

சட்டத்தரணிகள் சின்னத் துரை சுந்தரலிங்கம் மற்றும் பாலேந்திரா நிறுவனம் இரண்டு ஊடகவியலாளர்கள் சார்பில் தாக்கல் செய்துள்ள இந்த மனுக்கள் இரண்டும் அடுத்து வரும் தினங்களில் உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது, அவற்றின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதாடுவார்.

இந்த மனுக்களில் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன, பொதுசனப் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, சட்டமா அதிபர் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் குழு ஆகிய தரப்பினர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## சாதாரண பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று எதிரணி பக்கம் அமர்வார்கள் என ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தகவல் வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 | | 02 |
| 06 | | 04 |
| 1969 | | 2022 |



### திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன்
{B.Sc. Eng (Hons), ACMA}

சாமியன் அரசடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன் {B.Sc. Eng (Hons), ACMA} 02.04.2022 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நவரத்தினசிங்கம் (இலங்கை மத்திய வங்கி) மற்றும் வேதநாயகி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் கனிஷ்ட புதல்வரும், காலம் சென்றவர்களான குலரத்தினம் புஷ்பராணி தம்பதிகளின் அருமை மருமகனும், ரஜினியின் அன்பு கணவரும், யதுஷா, விதுஷன், மிதுஷன் ஆகியோரின் அன்பு தந்தையும், Dr.ஜனகன், சுரேந்திரன் (பொறியியலாளர்), ஜசோதா (USA) ஆகியோரின் அன்பு சகோதரனும், சுபோதினி, யசோதா, விநாயகமூர்த்தி (USA), தர்ஷினி (USA) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவயோகநாதன், ஆனந்தசிகாமணி, சிவக்கொழுந்து மற்றும் தெய்வசிகாமணி, சிற்றம்பலநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தணிகாசலம், பூலோகசிங்கம் மற்றும் விக்னராஜா, செல்வநாயகி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 06 .04 .2022 புதன்கிழமை காலை 08.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர் சாலையில் வைக்கப்பட்டு தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

**தகவல்:- ந.சுரேந்திரன் (சகோதரன்) - வா. விதுஷன் (மகன்)**



யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி -மன்னார் - வவுனியா - திருகோணமலை- மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஓட்டம் பிடிக்கும் நிலை வரலாம்!

**நாட்டின் இரண்டு முனைகளில் – தளங்களில் – பெரும் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு.**

**பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைக் கிளப்பி, அதை வைத்துக் கொண்டு மட்டுமே அரசியல் செய்ய முயன்ற ராஜபக்ஷக்கள், அதன் மூலம் கிடைத்த ஆட்சியதிகாரத்தைக் குடும்ப ஆதிக்க விவகாரமாக முழுமையாக மாற்றினர்.**

**யுத்தங்கள் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் மூலம் கிட்டிய யுத்த வெற்றியை மூலதனமாக்கி, பேரினவாத வெறியைக் கிளப்பி, அந்த மேலாதிக்கச் சிந்தனையில் அதிகாரத்தில் கோலோச்ச விரும்பிய அவர்களின் கனவு தகர்ந்து வருகின்றது.**

**நாட்டின் சூரிய சந்திரர்களாகப் போற்றப்பட்டவர்கள் இப்போது ராகு – கேது நிலைமைக்கு வந்துவிட்டனர். மிக மிகக் கேவலமான அரசியல் பிரகிருதிகளாக தமது தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்களினாலேயே அவலமாக நோக்கப்படும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.**

**இப்போதைய அரசியல் நெருக்கடிகளை அவர்கள் இரு தளங்களில் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.**

**ஒன்று – நாடாளுமன்றம்; மற்றையது – மக்கள் மன்றம்.**

**பின்னையதில் அவர்களுக்கு எதிரான சீற்றம் ஆக்ரோஷமாக வெடித்திருக்கின்றது. அதனை எதிர்கொள்வதற்கும் – முகம் கொடுப்பதற்கும் – ஏதேனும் திட்டமோ, உபாயமோ அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.**

**அவசரகால நிலைமைகளின் கீழான விதிமுறைகள், கடும் சட்டங்கள், பொலிஸார், பாதுகாப்புப் படையினர் மூலம் அவற்றை எதிர்கொண்டு காலத்தை இழுத்தடித்து சமாளிக்கலாம் என ஜனாதிபதியும் அவரைச் சூழ இருக்கும் படை அதிகாரிகளும் கருதலாம். ஆனால் மோசமடைந்து வரும் களநிலைமை, இந்த மக்கள் எழுச்சியை ஆட்சித் தரப்பு இலகுவாக சமாளிக்க முடியாது என்ற செய்தியையே சொல்லி நிற்கின்றது.**

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தங்காலை இல்லம் அமைந்துள்ள 'கால்ட்டன் ஹவுஸ்' பகுதியிலேயே மோசமானளவுக்கு மக்கள் போராட்டம் வெடித்திருக்கின்றது. பொலிஸாரின் தடைகளை உடைத்துக் கொண்டு மக்கள் கூட்டம் முன்னேறியிருக்கின்றது.**

**வெளிநாடுகளிலும், புலம்பெயர்ந்த தேசங்களில் – குறிப்பாக சிங்களவர்கள் செறிவாகவுள்ள இடங்களில் எல்லாம் – கோட்டாபாயவை பதவி விலகக் கோரும் எழுச்சி ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன.**

**கோட்டாபயவின் மகனும், மருமகளும் அமெரிக்காவில் வசிக்கும் இல்லத்தின் முன்னாலும் கூட ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.**

**இந்த மக்கள் எழுச்சியை முகம் கொள்ளும் வழியை நாடுவதை விடுத்து, நாடாளுமன்றத்தில் தமது நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அணியினரும் முயன்று வருகின்றனர்.**

**விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோர் விதித்த நிபந்தனைகளுக்கு இணங்கி, இடைக்கால அரசு – காபந்து அரசு – என்ற கயிறுகளுக்கு சம்மதித்து, அது குறித்து சிந்திக்கும் ஆட்சித் தலைமை, மறுபக்கத்தில் பெரும் கிளர்ச்சியாக – எழுச்சியாக – விஸ்வரூபம் எடுத்து வரும் மக்கள் போராட்டங்கள் குறித்து கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.**

**மக்கள் எழுச்சி தீவிரமடைந்தால் கதிரையை விட்டு ஓட்டம் பிடிப்பதைத் தவிர அதிகார பீடத்துக்கு வேறு வழியில்லை என்பதை சம்பந்தப்பட்டோர் மறக்காமல் இருப்பது நல்லது.**

# அரசாங்கம் தோல்வியை ஒப்புக்கொள்ளவேண்டும் நாட்டில் இந்த நிலைமை என்றும் ஏற்பட்டதில்லை

## நிலைமையைப் புரிந்தார் அநுர பிரியதர்ஷன யாப்பா



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை என்பது வரலாற்றில் என்றும் ஏற்படாத மிகவும் பாரதூரமான நிலைமை எனவும் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை கால நேரத்துடன் வழங்குவதில் அரசு தோல்வியடைந்துள்ளது எனவும் ஆளும் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

குருணாகல் பன்னல ஈரியகொல்லவில் உள்ள தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

என்றும் ஏற்படாத வகையில் நாட்டின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

அரசாங்கம் தமது இயலாமையை ஒப்புக்கொள்ள வேண்டும். இதனால், ஏற்பட்டுள்ள மக்களின் அதிருப்தியை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். நகர்ப்புற நடுத்தர மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தி தற்போது கிராமங்கள் வரை பரவியுள்ளது.

இதன் காரணமாகவே கடந்த சில வாரங்களாக தீப்பந்தங்களை ஏந்தியவாறு மக்கள் வீதியோரங்களில் எதிர்ப்புகளில் ஈடுபட்டனர். இவர்கள் வாழ்நாளில் போராட்டங்களுக்காக வீடுகளில் இருந்து வெளியில் வாரதவர்கள். பெண்கள் சிறிய குழந்தைகளைச் சுமந்து கொண்டிருந்தனர்.

இது சமூக ரீதியாகப் பாரிய பிரச்சினை. இலங்கைக்குள் எப்போதும் இப்படியான நிலைமை ஏற்பட்டதில்லை. இவ்வாறான நிலைமையில் அரசாங்கம் அவசர காலச் சட்டத்தை பயன்படுத்துவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவற்றின் மூலம் மக்களின் கோபம் மேலும் அதிகரிக்குமே தவிர குறையாது. தாம் தோல்வியடைந்துள்ளோம் என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதே பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியும்.

நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் அரசாங்கம் எடுக்கும் அனைத்து முடிவுகளையும் கண்களை மூடிக் கொண்டு ஆதரிக்கத் தயாரில்லை. நாங்கள் ஜனநாயகமாக மக்கள் பக்கம் இருந்தே செயற்படுவோம்.

இந்த நேரத்தில் எந்தக் கட்சியைச் சார்ந்த நபர் என்று மக்கள் பார்க்க மாட்டார்கள். 225 பேரும் ஒரே மாதிரியானவர்கள் என்றே மக்கள் கூறுகின்றனர்.

அரசாங்கம் முதலில் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மிகவும் நிபுணத்துவமிக்க நபர்கள் அடங்கிய பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அப்படி செய்தால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் எனவும் அனுர பிரியதர்ஷன யாப்பா மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு முதற்காலாண்டில் 250 கோடி டொலர் உதவி!

## இந்திய உயர் தூதரகம் தகவல்

ஜனவரியில் வழங்கப்பட்ட 40 கோடி டொலர் பணப்பரிமாற்றல் உள்ளடங்கலாக இவ்வாண்டின் முதற்காலாண்டில் இந்தியா இலங்கைக்கு 250 கோடி டொலர் கடனுதவியை வழங்கியுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் 50 கோடி டொலர் கடன் திட்டத்தின் கீழ் நாட்டை வந்தடைந்த 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை இலங்கைக் கான இந்திய உயர் தூதுவர் கோபால் பாக்லேவிடமிருந்து, வலு சக்தி அமைச்சர் காமினி லொக்குகே பெற்றுக் கொண்டார்.

இது தொடர்பாக இந்திய உயர் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

இந்திய கடன் திட்டத்தின் கீழ் நான்காவது கட்டமாக இந்த டீசல் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதம் 16, 20 மற்றும் 23 ஆம் திகதிகளில் எரிபொருள் தொகை நாட்டை வந்தடைந்தது. அதற்கமைய கடந்த சனிக்கிழமை நாட்டை வந்தடைந்த 40 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் உள்ளடங்கலாக 50 நாள்களில் 2 லட்சம் மெற்றிக் தொன் எரிபொருளை இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே –

தற்போதைய சூழ்நிலையில் அண்டை நாட்டு முதலிடம் என்ற கொள்கைக்கு இணங்க இலங்கை மக்களுக்கு இந்தியாவின் அர்ப்பணிப்பின் உறுதியான வெளிப்பாடாக எரிபொருள் விநியோகத்தை சுட்டிக் காட்டினார். இந்தியாவின் இந்த உதவிகளுக்கு வலு சக்தி அமைச்சர் காமினி லொக்குகே நன்றி தெரிவித்தார்.

முன்னதாக, மார்ச் 23 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கான சமீபத்திய இந்திய பொருளாதார மேம்பாட்டு உதவி மற்றும் கடன் வசதிகளுக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்தமையுடன், எதிர்காலத்திலும் இலங்கையின் வளர்ச்சியில் இந்திய அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்தும் என்று தான் எதிர்பார்க்கிறேன் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

பெற்றோலியப் பொருள்களை வாங்குவதற்கான 50 கோடி அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வங்கியும் இலங்கை அரசாங்கமும் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல கையெழுத்திட்டமையோடு, எக்ஸிம் வங்கி சார்பில் அதன் பிரதம பொது முகாமையாளர் கௌரவ பண்டாரி இந்தியாவின் சார்பில் கையெழுத்திட்டார்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் தனியான மற்றும் அவசர கோரிக்கைக்கு இணங்க, உணவு மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக 100 கோடி டொலர் கடன் வசதியை நீடிப்பது இறுதி செய்யப்பட்டுள்ளமையுடன், இந்த வசதியின் கீழ் இந்தியாவிலிருந்து அரிசியின் முதல் ஏற்றுமதி விரைவில் இலங்கையை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜனவரியில் வழங்கப்பட்ட 40 கோடி டொலர் பணப்பரிமாற்றல் உள்ளடங்கலாக இவ்வாண்டின் முதற்காலாண்டில் இந்தியா இலங்கைக்கு 250 கோடி கடனுதவியை வழங்கியுள்ளது. இலங்கையின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, இரண்டு கடன் வரிகளையும் விரைவாக இறுதி செய்து செயற்படுத்தத் தொடங்க இந்தியா கூடுதல் நேரத்தைச் செலவிட்டு செயற்படுகிறது.

துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உற்பத்தி போன்ற முக்கிய துறைகளில் இலங்கையில் மேம்படுத்தப்பட்ட இந்திய முதலீட்டின் மூலம் நடுத்தர முதல் நீண்ட கால திறன் உருவாக்கத்துக்கான முயற்சிகளை இந்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசின் சட்டங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மக்களை என்றும் தலைகுனிய விடமாட்டோம்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. திட்டவட்டம்

அரசாங்கத்தால் விதிக்கப்படும் பல்வேறு சட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் எதிராக நாட்டு மக்களை ஒருபோதும் தலைகுனிய விடமாட்டோம்.

எதிர்காலத்தில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் எந்தவிதமான சட்டத்துக்கும் நாங்கள் கட்டுப்படப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் பொது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அதனை மீறி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் பங்காளிக் கட்சிகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சுதந்திர சதுக்கத்துக்கு செல்லும் வழியில் இடம்பெற்றிருந்தது.

இதில் கலந்து கொண்டிருந்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

அரசாங்கம் தற்போது ஜனநாயகத்தை மீறி அதற்கு எதிராக செயற்படுகின்றமையை எதிர்த்து அரசாங்கத்துக்கு எதிராக நாட்டில் பல்வேறு சிவில் தரப்பினரும் வீதிகளில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

ஆனால் ஜனாதிபதி பொது அவசரகால நிலை பிரகடனம் ஒன்றை நடைமுறைப்படுத்தி மக்களுடைய ஜனநாயக உரிமையைப் பறித்து எடுத்திருக்கிறார்.

இதனைக் கண்டித்து அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளி கட்சிகள் இணைந்து எமது நாட்டில் முதலாவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட அதே இடத்துக்கு எமது இந்த பயணத்தை தொடர முடியாது உள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை பயன்படுத்தி எம்மைத் தடுத்திருக்கிறார்.

மேலும் தற்போது நாடு தழுவிய ரீதியில் பொது அவசரகால நிலை பிரகடனம், ஊரடங்கு உத்தரவு மற்றும் பல்வேறு சட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும், சட்டங்களுக்கு எதிராக நாட்டு மக்களுடைய ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக நாம் வீதியில் இறங்கியிருக்கிறோம்.



ஜனநாயகத்தை வென்றெடுக்க இந்த ஆர்ப்பாட்டம் மூலம் நாங்கள் அரசாங்கத்துக்கு சவால் விடுத்திருக்கிறோம். எதிர்காலத்தில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் எந்தவிதமான சட்டத்துக்கும் நாங்கள் கட்டுப்பட மாட்டோம். மக்களுடைய ஜனநாயக உரிமையை வென்றெடுப்பதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் போராடுவோம் என்பது உறுதி.

இதனூடாக மக்களை அடிமைப்படுத்தும் சட்டத்துக்கு தலைகுனிவதற்கு மக்களை விட மாட்டோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு 20 கோடி டொலர் கடனை வழங்கமுடியாத நிலையில் பாகிஸ்தான்!

## பதவி விலகிய பந்துல தகவல்



இலங்கையின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக பாகிஸ்தானில் இருந்து கோரப்பட்டிருந்த 20 கோடி டொலர் கடன் திட்டத்தை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என இலங்கையின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ள அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே அமைச்சர் பந்துல குணவர்த்தன பாகிஸ்தானுக்கு சென்று அந்த நாட்டுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் திட்டங்களை முன்வைத்தமையுடன் கடனையும் கோரியிருந்தார்.

இதேவேளை பங்களாதேஸிடம் ஏற்கனவே 20 கோடி டொலர்களைப் பெற்று அதனைத் திருப்பிச்செலுத்துவதற்கான காலத்தை நீடித்துள்ள இலங்கை, மீண்டும் அந்த நாட்டிடம் இருந்து 20 கோடி டொலர்களைக் கோரியுள்ளது.

எனினும் இன்னும் அந்த நாடு உரிய பதிலை வழங்கவில்லை.

இதனைதவிர 100 கோடி டொலருக்கு மேலதிகமாக டொலரை இந்தியாவிடமும், ஆஸ்திரேலியாவில் இருந்து 20 கோடி டொலர்களையும் இலங்கை கோரியுள்ளது. – என்றார்.

# ஒருவார காலத்துக்குள் பிரச்சினைகளுக்கு தீர்வு!

## என்கிறார் சந்திரசேன



போராட்டங்களால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது. நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இவ்வார காலத்துக்குள் அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்கும். அரசியல்வாதிகளின் தவறான வழிநடத்தல்களினால் போராட்டம் தீவிரமடைகிறது எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார ரீதியில் நாட்டு மக்கள் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் ஒருபோதும் மறுக்கவில்லை.

எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் ஆகிய சேவைத்துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைக்குத் தீர்வு காணுமாறு உரிய தரப்பினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளமையுடன், அவை தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் ஒரு தரப்பினர் நாட்டு மக்களை வீதிக்கிறக்கி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களைத் திட்டமிட்டு முன்னெடுத்து வருகிறார்கள். போராட்டங்களால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது.

சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இவ்வார காலத்திற்குள் தீர்வு காண அரசாங்கம் உரியநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. சேதன பசளை கொள்கைத் திட்டத்தை விரைவாக மாற்றியமைக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாக ஆராய விசேட திட்டங்களை செயற்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளோம். நாட்டு மக்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு சேதன பசளை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருதரப்பினரது தவறான செயற்பாடுகளால் சேதன பசளை திட்டம் குளறுபடியாக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைக் கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். அரசியல்வாதிகளின் தவறான வழிநடத்தல்களால் போராட்டம் தீவிரமடைகிறது. – என்றார்.

# காலைநேர ரயில் சேவை இல்லாமை பயணிகள் பெரும் அசௌகரியத்தில்!



காலை நேர ரயில் சேவையின்மையால் பயணிகள் பெரும் அசளகரியத்திற்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஊரடங்குச் சட்டம் காரணமாக ரயில் ஊழியர்கள் கடமைக்கு வருகை தர முடியாத நிலையால் காலை நேர ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்று (திங்கட்கிழமை) காலை 6 மணிக்குப் பின்னர் அலுவலக ரயில் சேவை வழமைக்குத் திரும்பும் எனவும் ஊரடங்குச் சட்டம் காரணமாக ரயில் ஊழியர்கள் கடமைக்கு வருகை தர முடியாத பட்சத்தில் காலை நேரத்துக்கான பல ரயில் சேவைகள் ரத்து செய்யப்படலாம் எனவும் ரயில்வே திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவசரகாலச் சட்டம் ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி வெளியீடு

அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் தனது அதிகாரபூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றைப் பதிவிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

அனைத்து பிரஜைகளின் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்குமாறு இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸாரை நிலைகுலைந்து ஓடவைத்த பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள்

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராக பாரிய மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பல்கலைக்கழக மாணவர்களும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும், மாணவர்களின் போராட்டம் நடைபெற்றது. கண்டி பேராதனை பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது முறுகல் நிலை ஏற்பட்டது.

மாணவர்களுக்கு தடையை ஏற்படுத்தும் வகையில் பொலிஸாரால் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. இதன்போது மாணவர்களும் பதிலுக்கு கண்ணீர்ப்புகை அடித்தமையால் பொலிஸார் நிலைகுலைந்து ஓட்டம் எடுத்துள்ளனர்.

வழமைக்குமாறாக நடத்தப்பட்ட இந்த கண்ணீர்ப்புகைத் தாக்குதல் தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

# தமிழ் அரசியல்வாதிகள் தமது சுயலாபத்துக்காக பதவியை வைத்திருப்பது வேதனையான விடயம்!



## இரா.சாணக்கியன் சாட்டை

இந்த அரசாங்கம் மக்களுக்குச் செய்யும் மோசமான செயற்பாடுகளைக் கண்டு ஆளுங்கட்சியில் உள்ள அமைச்சர்களே இன்று பதவியைத் துறந்து சென்றுள்ள நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காகப் பதவியை வைத்துக்கொண்டிருப்பது வேதனையான விடயம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

இந்த நாட்டில் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது வேதனையான விடயமாகவிருக்கின்றது. நாடு முழுவதும் வெடித்துள்ள போராட்டம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

இந்த நாடாளுமன்ற அமர்வு ஆரம்பித்த கடந்த ஒன்றரை வருடங்களாக நாங்கள் இதனைத் தெரிவித்து வருகின்றோம். காயம் ஒன்று இருக்கும்போது அந்தக் காயத்துக்கு மருந்திட்டு அதனைக் குணப்படுத்தாமல் அதனை மூடிமூடி வைத்து இன்று அந்த காயம் காரணமாகக் காலை வெட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே இந்த ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று எரிமலையை சூழ பஞ்சுகள் இருப்பது போன்றே மக்கள் உள்ளனர். இன்று எவர் போராட்டத்துக்கு அழைத்தாலும் தயார் நிலையிலேயே மக்கள் உள்ளனர். மக்கள் எதிர்நோக்கும் கஷ்டம் காரணமாகவே இந்த நிலையேற்பட்டுள்ளது.

இந்த நாட்டின் நிலைமை மிக மோசமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இன்று நடைபெறும் போராட்டங்கள் அரசியல் கட்சிகள் இணைந்து முன்னெடுக்கும் போராட்டம் அல்ல. மக்களாகவே முன்வந்து முன்னெடுக்கும் போராட்டம். இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக மக்கள் படும் கஷ்டங்கள் இன்று நெருப்பு மலையாகக் காணப்படுகின்றன.

இதன் காரணமாக இந்தப் போராட்டங்களை அரசாங்கத்தால் கட்டப்படுத்த முடியாத நிலைவரும். நாங்கள் பொறுப்புள்ள அரசியல் கட்சியாக இந்த பிரச்சினையை இந்த நாட்டில் எவ்வாறு தீர்க்கமுடியும் என்றே பார்க்கவேண்டும்.

இன்று இரண்டு வருடங்களுக்கு மேலாகவும் இந்த நிலைமை இவ்வாறு நீடிக்குமானால் மக்கள் வன்முறைகள் ஊடாகத் தமது கோபத்தை வெளிப்படுத்த முனையும்போது அதனை அடக்க அரசாங்கம் இராணுவத்தினரை பாவிக்கும் நிலையும் உருவாகலாம். இராணுவத்தின் குடும்பமும் இந்த நாட்டில் உள்ளது.

அவர்களின் குடும்பத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கும். இன்று அரசாங்கத்தின் மீது உள்ள அதிருப்தியைக் கொண்டு ஒரு சிலர் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றனர். கலவரத்தின்போது பாதுகாப்பு பிரிவினர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பஸ் எரிக்கப் படுகின்றது.

கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனக்கல வரத்தின் பின்னணியில் செயற்பட்டவர் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளார். இவற்றைப் பார்க்கும்போது சந்தேகத்துடனேயே பார்க்கவேண்டிய நிலையுள்ளது. தற்போதுள்ள பிரச்சினைகள் மக்களுக்கும் தெரியும். அரசியல்வாதிகளுக்கும் தெரியும்.

ஆனால் அரசாங்கத்துக்குத்தான் தெரியாத நிலையுள்ளது. அரசாங்கத்திற்கு மட்டும்தான் மக்கள் படும் கஷ்டம் தெரியாமல் உள்ளது. ஜனாதிபதி நாட்டின் உண்மை நிலை யினை மக்களுக்கு எடுத்துச்சொல்லி இதற்கு மாற்றுவழியாக அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்து ஓர் இணக்கப்பாட்டை எட்டுவதன் மூலமே நாட்டில் உள்ள பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

விரைவில் ஒரு தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலையில்லாத காரணத்தால் இந்த நிலைமையைத் தொடர இடமளிக்கக் கூடாது. இன்றைய நாட்டில் சூழ்நிலையில் 30 வருடகால யுத்தத் தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் இன்றும் வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் அடக்கு முறைகளுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தின்போது பொலிஸ் அதிகாரியொருவர் தாய் ஒருவர் மீது நடத்திய தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதற்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு எனது ஆதரவு என்றும் இருக்கும். போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டாலும் அந்தப் போராட்டம் நடைபெறும்போது நாங்கள் ஆதரவு வழங்குவோம். நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்த வேளையில் போது கூட இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரச்சினை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தினோம்.

வடக்கு, கிழக்கில் பொருளாதாரப் பிரச்சினைகளையும் தாண்டி பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளன. வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை மட்டக் களப்பு மாவட்டத்தில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக நான் தெரிவித்த கருத்தை கிழக்கு மாகாண ஆளுநர் பொய்யென்று கூறியுள்ளார்.

ஆனால் அதனை நான் ஆதாரபூர்வமாக நிரூபிக்கத்தயாராகவிருக்கின்றேன். பொருளாதார ரீதியாகவும் இனரீதியாகவும் அடக்குமுறைகளை தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இன்று எம்மவர்கள் சிலர் அரசாங்கத்தின் கைக் கூலிகளாக உள்ளமையே இதற்குக் காரணமாகும்.

இந்த நாட்டில் உள்ள தாய்மார் எதிர் கொள்ளும் பிரச்சினைக்காக ஹிருணிக்கா பிரேமச்சந்திரன் முன்னெடுத்த போராட்டத்தை வரவேற்கின்றேன். அந்தப் போராட்ட நேரத்தில் அரசாங்கத்தின் கைக்கூலியொருவர் அந்தப் போராட்டத்தைக் குழப்புவதற்கு முயற்சிகளை முன்னெடுத்திருந்தார்.

இன்று அரசாங்கத்துடன் இருக்கும் இராஜாங்க அமைச்சர்கள், இந்த அரசாங்கம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கும் மோசமான செயற்பாடுகளைக்கண்டு தமது பதவிகளைத் தூக்கியெறிந்துவிட்டு வெளியேறிவிட்டனர். ஆனால் தமிழர்கள் ஒருசிலர் மட்டும் அபிவிருத்திக்குழு தலைவர் பதவி, இராஜாங்க அமைச்சர் பதவியை வைத்துக்கொண்டு தங்களது சுயநலத்துக்காக அரசாங்கத்தை ஆதரிக்கின்றமை வேதனைக்குரிய விடயமாகும். மக்களுக்காக அரசியலுக்கு வந்த நீங்கள் ஆளும்கட்சிக்காக அரசியலுக்கு வந்தவர்களாக இருக்கக்கூடாது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தின் பதவிகளைப் பிடித்துக்கொண்டுள்ளவர்களை மக்கள் எதிர்காலத்தில் இனங்கண்டு தெற்கில் எவ்வாறு அரசியல்வாதிகள் துரத்தியடிக்கப்படுகின்றார்களோ அவ்வாறு இங்கும் அவர்கள் வரும்போது துரத்தியடிக்கவேண்டும். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# மக்களின் எதிர்ப்பில் நியாயம் இருக்கிறது

## டலஸ் கூறுகிறார்



மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தானும் ஏற்றுக் கொள்கிறேன் எனவும், மக்களின் எதிர்ப்பில் நியாயம் இருப்பதாகவும் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் ஊடகப் பொறுப்பாளர்களுக்கு இடையிலான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக இருந்தால் அரசாங்கத்தை கவிழுங்கள் எனவும் நாட்டை கவிழ்க்கா தீர்கள் என இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

74 வருடங்களாக பாதுகாக்கப்பட்ட ஜனநாயகத்தைக் காப்பது அனைவரினதும் பொறுப்பு என்றும், மிரிஹான யில் ஜனாதிபதி இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறைகளை மன்னிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# தொலைத்தொடர்பு, ஊடகத்துறை சார்ந்தவர்களை அழைக்கின்றது மனித உரிமைகள் ஆணைக்குழு

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தலைவர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை ஆகிய அமைச்சுகளின் செயலாளர்கள் ஆகியோர் எதிர்வரும் 5 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜனாதிபதியிடம் கையளிக்காவிட்டால் இராஜினாமா சட்டபூர்வமானதில்லை!

## சுட்டிக்காட்டுகிறார் சாலிய பீரிஸ்

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், அமைச்சரவைக்கும் என்ன நடக்கின்றது என்பதை மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டிய கடப்பாடு உள்ளதாக சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தவிர்ந்த, அமைச்சரவையிலுள்ள அனைத்து அமைச்சர்களும் பதவி விலகத் தீர்மானித்துள்ளனர் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார்.

அரசுக்கு எதிராக பட போராட்டங்கள் வலுப்பெற்று வரும் பின்னணியில் இவ்வாறு அனைத்து அமைச்சர்களும் பதவி விலகத் தீர்மானித்தனர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் மேற்படி விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் -

அமைச்சர்கள் தங்கள் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடமே கையளிக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த இராஜினாமா சட்டபூர்வமானதில்லை.

அமைச்சர்கள் தங்கள் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிக்கும்போதே அவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டனர் எனக் கருதப்படும்.

அமைச்சர்கள் பிரதமரிடம் தங்கள் இராஜினாமாவைக் கையளித்துள்ளனர் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அப்படியானால் இந்த இராஜினாமாக்கள் சட்டபூர்வ தன்மையைக் கொண்டவையில்லை.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் என்ன நடக்கின்றது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது.

எங்கள் நாட்டாலும் பொருளாதாரத்தாலும் இந்தநிச்சயமற்றநிலையை தாங்கமுடியாது என நான் கருதுகின்றேன் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.





# தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்துக்கு நெட்டித் தள்ளியோரே பெரும்பான்மையினர்தான்!

## அட்டாளைச்சேனை மக்கள் எழுச்சிக் கூட்டத்தில் ஹக்கீம் விளக்கம்

அட்டாளைச்சேனையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற – பொருளாதார நெருக்கடியில் உள்ள அரசாங்கத்திற்கு எதிரான – பொதுக்கூட்டத்தின் போது கலந்து கொண்டு உரையாற்றிய ரவூப் ஹக்கீம் , இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நடக்கிற எல்லா சம்பவத்திற்கும் முஸ்லிம்களின் நாட்டுப்பற்றின்மைதான் காரணம் என கூறுகின்றது. இந்த மாதிரிக் கலைத்துத் திரிந்த கூட்டம் முன்னைய தசாப்தங்களில் தமிழ் சமூகம் மீது தேவையற்ற காழ்ப்புணர்ச்சியை வளர்த்து, அவர்கள் மீது அவதூறு பரப்பி, அவர்களுக்கு இருந்த நியாயமான அதிகார வேட்கையை தணிக்க முடியாமல், இளைஞர்கள் ஆயுதம் தாங்கி போராடுகின்ற அளவுக்கு வேறு வழி இல்லை என்ற நிலைக்கு தள்ளிவிடப்பட்டார்கள். அதற்க்கு பேரினவாத முகவர்களும் காரணம். அவர்கள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளும் உள்ளனர்" – எனத் தெரிவித்தார் .

கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

"கடந்த ஈஸ்டர் குண்டுவெடிப்பின் போது எமக்குள் இந்தப் பயங்கரத்தை விதைத்தது யார் என்பது தெரியாது. ஆனால் இந்தக் குண்டுவெடிப்பின் பின், அதன் விளைவுகளைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்ச்சி இருந்தது. அதன் காரணமாகவே முஸ்லிம்கள் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட மக்களின் தலைவரான கர்தினால் ஆண்டகை பொது வெளியிலே வெளிப்படையாகப் பேசுகிறார். இந்த விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திற்குக் கொண்டு போய் விசாரிக்க வேண்டும் எனவும், பாப்பாண்டவரிடமும் சர்வதேசத்திடமும் விவகாரத்தைக் கொண்டுபோய் இந்த அரசாங்கம் மூடிமறைக்கின்ற விடயங்களை விசாரிக்கவேண்டும் எனவும் கோரிக்கை வைக்கும் நிலை உள்ளது" – என ஹக்கீம் குறிப்பிட்டார்

"இந்த அரசாங்கம் என்ன வாக்குறுதிகளை சொல்லி ஆட்சிக்கு வந்தது? அவை எவற்றையும் நிறைவேற்றவில்லை. ஜனாதிபதியின் வர்த்தமானி நாளுக்கு ஒவ்வொருவிதமாக உள்ளது. பரீட்சை எழுத மாணவர்களுக்கு தாள் இல்லை, சீமெந்து 2,500 ரூபாவுக்கு மேல். எப்படி வீடு கட்ட முடியும்?" – எனவும் அவர் கேள்வி எழுப் பினார்.

"முட்டாள்தனங்களால் இந்த அரசாங்கம் நிரம்பி உள்ளது. (பானை) முட்டியை ஆழத்தில் வீசினால் கொரோனா போகும் எனச் செயற்படுகிறார் பவித்திரா வன்னியாராய்ச்சி. அதோடு அவர் புதிய "மின்உற்பத்தி நிலையங்களை கடந்த அரசு நிறுவவில்லை என குற்றம் சுமத்துகிறார்கள். இந்த அரசாங்கம் எத்தனை புதிய மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கியது?

"இந்த நாட்டில் நீர்த்தேக்கங்கள் மூலம் 1,390 மெஹா வாட்ஸ் மின் உற்பத்தியும், டீசல் இயந்திரங்கள் மூலமாக 1,500 மெஹாவாடஸ் மின்சாரமும், இதர இயற்கை மூலமான காற்றாடி, சூரியகலங்கள் மூலமாக எனச் சேர்த்து 4,500 மெகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் .ஆகக்கூடிய மின் தேவை உள்ள நேரத்தில் தேவையான மின்சார அளவு 2,500 தொடக்கம் 3,000 மெஹா வாட்ஸ்களே. ஆனால் அதனை உற்பத்தி செய்ய முடியவில்லை. மழை வீழ்ச்சி இல்லாததன் காரணமாக 60 தொடக்கம் 70சதவீதம் மின் உற்பத்தி இல்லை, அதை ஈடு செய்ய டீசல் தேவை, டீசலை வாங்க அரசாங்கத்திடம் பணம் இல்லை, அதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தினுடைய முட்டாள்தனமான நிதி முகாமைத்துவம்தான்.

"தொடர்ந்து நாட்டில் ஒரு மணி நேர மின் வெட்டினால் மூன்று பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுகிறது. பொருளாதார இதனால் பாதிக்கப்படுகிறது" – எனவும் அவர் குறிப்பிட்டார்.

"இந்த (நெருக்கடி) நிலைமைக்கு கொரோனாவே காரணம், ரஷ்யா – உக்ரைன் பிரச்சனையே காரணம் என்றெல்லாம் அரசாங்கம் ஏமாற்றுகிறது. நமது அயல் நாடுகளுக்கும்தான் கொரோனா வந்தது. ஆனால் அங்கெல்லாம் பொருளாதாரம் விழுந்துவிடவில்லை. அவர்கள் வளர்ச்சி அடைந்துள்ளார்கள்.

"அதனால்தான் இதில் இருந்து(இந்த ஆட்சிப் பீடத்திடமிருந்து) விடுபட வேண்டுமென நாடு பூராகவும் மக்கள் கூடுகின்றனர். " என்றார் ஹக்கீம்.

"நாங்கள் ஏன் வரி செலுத்துகிறோம்? எங்கள் ஜனநாயக உரிமைகளைப் பெற. அவை கிடைக்காத இடத்து ஏன் நாங்கள் வரி செலுத்த வேண்டும்?" எனக் கேள்வி எழுப்பிய அவர் இரசாயன உர இறக்குமதி தொடர்பான அரசின் முடிவால் விவசாயத்துறையே அடியோடு பாதிப்படைந்துள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

"என்னிடம் ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் அழைப்பெடுத்து, இந்தியாவிடம் இருந்து இவ்வளவு உதவி பெறுகிறோம், இதற்கு இந்தியப் பிராந்தியமாக இருந்துவிடலாம் எனச் சொன்னார். அத்தகைய நிலை உருவாகி உள்ளது" – எனக் குறிப்பிட்டார்.

"சிறுபான்மை மக்கள் மீது பழிசுமத்தி, பெரும்பான்மை மக்களை இனியும் ஏமாற்ற முடியாது என்ற கேடுகெட்ட நிலை அவர்களுக்கு இப்போது விளங்க வேண்டும். சிறுபான்மையின மக்களை மட்டுமல்ல, பெரும்பான்மையின மக்களை, பெரும்பான்மையினப் பத்திரிகையாளர்கள் மற்றும் அரசை விமர்சிப்பவர்களை வேட்டையாட பயங்கரவாத தடுப்புச்சட்டம் பாவிக்கப்படும் சூழப் உருவாகியுள்ளது.

"இந்த அரசு பயங்கரவாத தடைச்சட்டம் மூலம்தான் பயங்கரவாதத்தை அழித்ததாகக் கூறுகிறது. உண்மையில் அது அல்ல வழி, நீதியான விசாரணையே வழி. அதனை மாற்ற – சரியான வழியை ஏற்படுத்த அவர்கள் முன்வரவில்லை" – எனவும் தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்குப் பின்னால் பாதுகாப்புத்துறை உள்ளதா என்பது விசாரிக்கப்பட வேண்டும் என அது தொடர்பான தனது அறிக்கையில் ஐ.ந. மனித உரிமை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அநியாய ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்ப முஸ்லிம் காங்கிரஸ் முன்னிலை வகித்து போராடும் எனவும், அதே நேரம் அனைத்து கட்சிகளுடனும் இணைந்து நாடு முழுக்க இந்தப் பிரச்சினையை எடுத்துச்செல்வோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சூடுபிடிக்கும் இலங்கை அரசியல் 20 ஐ இரத்துச் செய்ய முனைவு!

## ஐக்கிய மக்கள் சக்தி கடும் தீவிரம்

கொழும்பு, ஏப். 05

20 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் பல்வேறு தரப்புக்களுடனும் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு 20 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய முயற்சிக்கிறார் என ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

20 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்வது குறித்த முனைப்புக்கள் பல்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தற்போது இலங்கை அரசியல் சூடுபிடித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தவிர்ந்த, அமைச்சரவையிலுள்ள அனைத்து அமைச்சர்களும் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதாக வெளியான தகவலில் உண்மை இல்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய நெருக்கடிக்கு பிரதான காரணகர்த்தா என பலராலும் குற்றம்சாட்டப்படும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தொடர்ந்தும் மௌனம் காத்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மலையக மூத்த கல்வியியல் பேராசிரியர் சந்திரசேகரம் ஞாயிறு காலமானார்!



இலங்கையின் மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தமது 78 ஆவது வயதில் காலமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் காலி – பலப்பிட்டிய என்ற இடத்தில் உள்ள விருந்தகம் ஒன்றில் தங்கியிருந்தபோதே மாரடைப்பால் காலமானார் என அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவரின் உடலம் தற்போது பலப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

1944 டிசெம்பர் மாதம் பிறந்த பேராசிரியர் சந்திரசேகரம், இலங்கையின் தமிழ் கல்வி வரலாற்றில் பாரிய பங்களிப்புக்களை செய்தவராவார்.

பதுளையை பிறப்பிடமாகக்கொண்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கல்வியியல் துறையில் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் ஹிரோசிமா பல்கலைக்கழக முதுமானி பட்டதாரியாவார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை முன்னாள் பீடாதிபதியாகவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவராகவும் மற்றும் கொழும்பு தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் அவர் பணியாற்றினார்.

சமூக பிரஜைகளுடன் செயற்பட்டு தமது எழுத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளின் மூலம் சமூக மேம்பாட்டுக்காக பாடுபடுபவர். இவர் தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் புலமை கொண்டவர் என்பதுடன் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படவேண்டும்என்றகொள்கையை முதன் முதலில் முன்மொழிந்த சோ.சந்திரசேகரம், அந்த கொள்கையில் உறுதியாகவும் இருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் சட்டமா அதிபர் அக்கறையின்மை எதற்கு?

## அருட்தந்தை சத்திவேல் கேள்வி



ஒரு நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர் இன்னொரு நீதிமன்றில் குற்றமற்றவர் என முடிவு செய்வது விசித்திரமாய் உள்ளது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இரத்தினபுரி மேல் நீதிமன்றில் 2020.07.31 திகதி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பிரேமலால் ஜயசேகர உட்பட மூவர் 2022.03.31 அன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் குற்றவாளிகள் இல்லையெனக் குற்றங்களிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர் இன்னொரு நீதிமன்றில் குற்றமற்றவர் என முடிவு செய்வது விசித்திரமாய் உள்ளது.

இது சட்டங்களில் உள்ள ஓட்டையா? சட்டத்தரணிகளின் வாதத் திறமையாலா? என்பதே பொதுமக்களின் கேள்வி இவ்வாறு விடுதலை பெற முடியாதவர்களை ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை பெறுவது நாட்டில் நிலவும் அரசியல் கலாச்சாரமாக உள்ளது.

அதிகாரத்தோடு தொடர்புடையவர்களுக்கும் பண பலம் படைத்தவர்களுக்கும் நீதித் தேவதை சார்போ எனவும் சாதாரண மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அதிகாரத்தோடு தொடர்பும் பண பலமும் இல்லாத சாதாரண அடித்தட்டு மக்கள் சிறையில் வாடும் அவர்களின் உறவினர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அதிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் இறுக்கம் மற்றும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதித்துறையினதும் அதிகாரிகளினதும் அசமந்தப் போக்கு என்பன காரணமாகவும் சட்ட நுணுக்க அறிவு கொண்ட போதிய சட்டத்தரணிகள் இன்மையாலும் அரசியல் கைதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்ல பிணை இன்றி நீண்ட காலம் சிறையில் வாடுகின்றனர். அத்தோடு பிணை வழங்குவதற்குச் சிபாரிசு செய்யக்கூடிய அதிகாரம் கொண்டவராகச் சட்டமா அதிபர் விளங்கிய போதும் அரசியல் கைதிகளின் விடயத்தில் அதனை செய்யாமல் இருப்பது அரசியல் காரணம் என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிம்மின் பயிற்சி முகாமில் பங்கேற்றதாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்த 16 பேருக்குச் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் கடந்த 25ஆம் திகதி பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசியல் கைதிகள் விடயத்தில் சட்டமா அதிபர் அக்கறையின்றி இருப்பது ஏன்? ஒரே நாடு – ஒரே சட்டம். ஆனால் தமிழர்கள் அந்நியமாகப் பார்க்கப்படுகிறனர் என்பதற்கு இது இன்னுமொரு உதாரணமாகும்.

அண்மையில் ஜனாதிபதியோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சுமந்திரன் 10 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை வெளியில் விடுவது தொடர்பாக நீதி அமைச்சரோடு கலந்தாலோசிக்கப்படும் என தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் அத்தனை பேரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் இது தவிர அவர்களை வகைப்படுத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணை போவது என்பது அரசியல் கைதிகளுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் செய்கின்ற துரோகமாகவும் அமையும் என குறிப்பிட்டப்பட்டுள்ளது.

# 20 இற்குக் கை தூக்கியோரும் இன்றைய நிலைக்குப் பொறுப்பு!

## இம்ரான் எம்.பி. சாடல்



ஜனாதிபதியின் தூர நோக்கற்ற செயற்பாடுகளாலேயே நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும், இதற்கு 20 ஆம் திருத்தத்துக்குக் கை தூக்கிய அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அரசமைப்பின் 20 ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகாரத்தை அவர் தன்னிச்சையாகப் பயன்படுத்தியதாலேயே நாடு இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனவே, ஜனாதிபதிக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் இந்த 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

ஏனெனில் அவர்கள் வழங்கிய ஆதரவே ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்த்தது. ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம் பொதுத் தேர்தல் வரை பொது ஜன பெரமுனவோடு இணைந்து பணியாற்றியவர்கள் 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியமைக்கு ஏதோ ஒரு வகையில் காரணம் கூற முடியுமாக இருக்கும்.

எனினும், ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் எம்மோடு ஒன்றாக இருந்தவர்கள், தேர்தல் மேடைகளில் எம்மோடு சேர்ந்து ஜனாதிபதிக்கு எதிராக வசைபாடியவர்கள் நாடாளுமன்றத்தில் கையில் 20 எதிர்ப்பு அடையாளத்தைப் பொறித்துக் கொண்டிருந்தவர்கள் ஜனாதிபதிக்கு வலுசேர்த்த 20 ஆம் திருத்தத்திற்கு திடீரென ஆதரவு வழங்கியமை தான் பெரிய ஆச்சரியமாக உள்ளது.

நேர்மையான சிந்தனை உள்ளவர்கள் இந்தச் செயலை இன்னும் வியப்போடு தான் பார்க்கின்றனர். குர்ஆன், ஹதீஸை முன்னிறுத்தி தங்களைப் பலப்படுத்திக் கொண்ட கட்சியைச் சேர்ந்த இவர்கள் எதிர்க் கட்சியோடு ஒன்றாக இயங்கி அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து பெரும் நம்பிக்கைத் துரோகத்தில் ஈடுபட்டமை மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை எமக்குத் தெரிகின்றது.

இவர்கள் திடீரென தடம் மாறியமைக்குக் காரணம் என்ன, அரசோடு இவர்களுக்குள்ள டீல் என்ன என்பது குறித்தெல்லாம் பொதுமக்கள் நன்கு விளங்கி வைத்துள்ளார்கள்.

பொதுமக்களை எப்போதும் உணர்ச்சி வசப்படுத்தி ஏமாற்ற முடியாது என்பதையே இது தெளிவுபடுத்துகின்றது. எரிபொருளுக்கு வரிசை எரிவாயுவுக்கு வரிசை. பால்மா பெற முடியாது.

இரவு, பகல் பாராது தொடர்ச்சியான மின்வெட்டு. வருமானம் அதிகரிக்காத நிலையில் பொருள்களின் விலை மூன்று மடங்கு அதிகரிப்பு இவைதான் இன்றைய நாட்டு நிலைமை. இதனால் பொதுமக்கள் எதிர்நோக்கும் அவலங்களும், பிரச்சினைகளும் சொல்ல முடியாது.

பொதுமக்களுக்கு இவ்வளவு சோகங்கள் இருந்தும் 20 இற்கு ஆதரவு வழங்கியோர் இன்று வாய்மூடி மௌனமாக இருக்கின்றனர். பொதுமக்களின் வாக்குகளால் அதிகாரத்துக்கு வந்தவர்கள் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கொஞ்சமாவது கவனம் செலுத்த வேண்டும்.

குறைந்தது கருத்துக்களாவது சொல்ல வேண்டும். இவை எதுவுமில்லாத அளவுக்கு அவர்களது டீல் அவர்களைக் கட்டிப்போட்டுள்ளது. அவர்களை மௌனிக்கச் செய்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டு மக்கள் மிகவும் கடினமான காலத்தில்!



குமார் சங்கக்காரவும் வேதனை

இலங்கை மக்கள் மிகவும் கடினமான காலத்தை எதிர்கொண்டுள்ளனர், நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் விரக்தி நிலையைப் பார்க்கும்போது இதயம் நொறுங்குகின்றது.

ஒவ்வொரு நாளும் முந்தைய நாளை விட கடினமானதாகக் காணப்படுகின்றது. மக்கள் தங்கள் குரல்களை உயர்த்தி என்னதேவையோ அதனைக் கேட்கின்றனர் – ஒருதீர்வு சிலர் தங்கள் குரல் வெளிப்படுவதற்காக மனக்கசப்பு மற்றும் சீற்றத்துடன் செயற்படும் அதேவேளை ஏனையவர்கள் அதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்கின்றனர்.

மக்களை செவிமடுப்பதும்,அழிவை ஏற்படுத்தும் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சிநிரல்களை ஒதுக்கிவைப்பதும்,நாட்டின் சிறந்த நலனைக் கருத்தில்கொண்டு செயற்படுவதுமே சரியான தீர்வாகும்.

மக்கள் எதிரிகள் அல்லர். இலங்கை என்பது அதன் மக்கள் நேரம்வேகமாக ஓடுகின்றது மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்கவேண்டும்; வழங்கவேண்டும். – என்றார்.

# வழமைக்குத் திரும்பின பொதுப்போக்குவரத்துகள்

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதால், ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன என்று ரயில் திணைக்களம் நேற்று காலை அறிவித்துள்ளது.

அதேநேரம், 15 சதவீத தனியார் பஸ்கள் இன்று சேவையில் ஈடுபடுகின்றன என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

அருகில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபையில் தனியார் பஸ்களுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று போக்குவரத்து அமைச்சும், இலங்கை போக்குவரத்துச் சபையும் தமக்கு அறியப்படுத்தியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், இலங்கை போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பஸ்களும் வழமைக்கு திரும்பியுள்ளன என அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் மண்ணெண்ணெய் பெற மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு!

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டமையால் எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ள மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை முதல் விவசாய தேவை உட்பட வீட்டுத்தேவைக்கும் மண்ணெண்ணையை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். பெண்கள் மற்றும் வயோதிபர்கள் சிறுவர்கள் என பலரும் மண்ணெண்ணெய்க்காக காத்திருந்த நிலையில், மின்சார தடை காரணமாக நீண்ட நேரமாக எரிபொருளை வழங்காத நிலை காணப்பட்டமைடன் சில எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லாத நிலையும் காணப்பட்டது.

இதேவேளை, வாகனங்களும் டீசலை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்தபோதிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் இல்லாத நிலை காணப்பட்டது.

# இலங்கையில் அங்லிக்கன் திருச்சபை நிறுவனங்களின் பெரும் வீழ்ச்சி



ஜோன் தேவதாசன்
(பரி.யோவான் கல்லூரியின் பழைய மாணவன், லண்டன்)

(நேற்றைய தொடர்ச்சி)

### பட்டமற்ற CMS தலைவர்

பட்டங்களை பற்றி சமூக நம்பிக்கை இப்படி இருக்க டான் சீவரட்னம் என்பவர் தோட்டக் கம்பனியில் அனுபவம் பெற்று, அப்போது புதிதாக மலைநாட்டில் நிறுவப்பட்ட புதிய பல்கலைக்கழகத்தில் கற்காது கௌரவ கலாநிதிப் பட்டம் மட்டும் பெற்றவர். அவர் CMS தலைவர் ஆக்கப்பட்டார். கௌரவ கலாநிதி பட்டம் பெற ஒன்றும் செய்யவேண்டியதில்லை. அது ஒருவரை மரியாதை பண்ணும் நோக்கத்தில் கொடுக்கப்படுவது. ஆனாலும் ஒரு முறைமையான உழைத்த கலாநிதிப் பட்டத்தைப் பெற, பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து, துறையில் ஒரு புதிய கருத்தை வெளிவிட்டு, அதை ஒரு நிபுணர்கள் குழுவின் முன் வாதிட்டு நிலைநாட்ட வேண்டும். இது பல வருடங்கள் எடுக்கும் கஷ்டமான வேலை. இக்காரணத்திற்காகவே இப்பட்டம் உழைத்த கலாநிதிப்பட்டம் (Earned Doctorate) எனப்படுகிறது. இதனால் நியாயமான முறைமை என்னவெனில் கௌரவ கலாநிதிக் பட்டம் பெற்றவர்கள் தமது பெயருக்கு முன்பாக, கலாநிதி அல்லது Dr என்று போடமுடியாது. ஆகையால் இப்படி போடுபவர் தானும் உழைத்துத்தான் கலாநிதிப்பட்டத்தை பெற்றார் என்று பொய் சொல்லி நடிப்பதாய் அமையும்.

### தரக்குறைவு எதிர்பார்க்கப்பட்டிருக்க வேண்டும்

பொதுவாக நிர்வாகத்திலிருப்பவர்கள் தரக்குறைவாகவும் பட்டமற்றவர்களாகவும் நியமிக்கப்பட்டால் தாம் உள்ள இடத்தில் தரம் கொண்டவர்களோ பட்டமுள்ளவர்களோ வருவதை விரும்பாதமை எதிர்பார்க்கப்படவேண்டியதே. உள்ளே இருப்பவர்கள் தம்மை விட தரம் குறைந்தவர்களைத்தான் வரவேற்பார்கள்.

டான் சீவரட்னம் CMS ஐ விட்டு செல்ல, அடுத்ததாக வந்த CMS தலைவர் தஞ்சா பீரிஸ் என்பவர். அவரும் டான் சீவரட்னத்தை போலவே ஒரு பல்கலைக்கழகத்தில் மாணவராகவோ ஆசிரியராகவோ இருந்தறியாதவர். தக்க G.C.E. உயர்தரத்துடன் பல்கலைக்கழகம் செல்லாது சட்டக்கல்லூரிக்குச் சென்று சட்டத்தரணி ஆகியவர். கல்லூரியில் மாணவியாக இருந்ததைவிட கல்வியைப் பற்றியோ அதன் கோட்பாடுகள் பற்றியோ ஏதும் தெரிந்தவரோ புரியவில்லை.

### பரி.யோவான் கல்லூரி கொழும்பில் உள்ளவர்களின் காற்பந்து

சில வருடங்களுக்கு முன்பு அத்தியட்சகர் கெனத் பெர்னான்டோ தனது அருகிய சொந்தக்காரனான எக்சித் பெர்னான்டோ என்பவரை கல்கிஸை பரி. தோமா கல்லூரியின் அதிபராக நியமித்தபின் 10 வருட கல்வி கற்பிக்கும் அனுபவம் இல்லாத காரணத்தினால் உச்ச நீதிமன்றத்தால் பதவி நீக்கப்பட்டார். இது பலருக்கும் தெரிந்த கதை.

கடந்த பரி. யோவான் அதிபர் ஞான பொன்ராஜிற்கு எதிராக சில குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்பட்டமையால் விசாரணை ஒன்று அத்தியட்சகரால் ஆரம்பிக்கப்பட்டு, அவ்விசாரணையின் முடிவு ஏதும் தெரியவர முன்பே அவர் இளைப்பாறும் காலமாக முன்பே இளைப்பாறினார். விசாரணை முடிவு சொல் லப்படவில்லை. தொடர்ந்து வட குருமுதல்வராக இருந்த சாம் பொன்னையா தற்காலிக அதிபராக நிய மிக்கப்பட்டார். அவரிடம் UGC ஆல் அங்கீகரிக்கப்பட்ட பட்டமும் இல்லை. அவருக்கு உச்சநீதிமன்றத்தால் உரைக்கப்பட்ட 10 வருட அனுபவமும் இல்லை. அவர் திருச்சபை கூட்டமொன்றில் வடக்குத் தமிழருக்கு ஆளையாள் சுடத்தான் தெரியும் என்றதிலிருந்து எதோ வடக்குத் தமிழருடன் கறள் வைத்துள்ளார் என்று பலர் விளங்கினர்.

அப்படி இருந்தும், கொழும்பில் வசிக்கும் தஞ்சா பீரிஸ் அப்படி எவ்விதத்திலும் தகுதியற்ற ஒருவரை நியமித்தமை கொழும்பில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாணத்தாரையும் ஓரங்கட்டி தமது தரமற்ற நண்பரை வாழ்க்கையில் முன்னேற்றவே உபயோகிக்கிறார்கள் என்பதனை காட்டுகிறது என்று பலர் எடுத்தனர். யுத்தத்தின் பின் பரி. தோமா கல்லூரி பங்குதாரர் போல் யாழ்ப்பாண பங்குதாரர் வழக்கு வைக்க துணியமாட்டார்களென்றும், துணிந்தாலும் அதற்கு வேண்டிய பணத்தை வைத்திருக்க மாட்டார்களென்றும் நம்பியே இப்படி சட்டத்திற்கு முரணாக தமிழ் திருச்சபையிலும் செயல்பட்டார்கள் போலுமெனப் பலர் யாழ்ப்பாணத்தில் எடுத்துக்கொள்கிறார்கள்.

இலங்கை ஜனநாயகத்தில் அரசாங்கம் மாற, மந்திரிமார், ஆணையாளர்கள் போன்ற பழைய அரசால் நியமிக்கப்பட்ட யாவரையும் புதிய அரசு இராஜினாமா பண்ணக் கேட்டு தாம் விரும்புகிறவர்களை நியமிப்பது வழக்கம். அதேபோலவே பழைய அத்தியட்சகர் டிலோ கனகசபை விலக, தமிழ்மரபுப் பரவர் குலமெனப்படும் புதிய அத்தியட்சகர் துஷ்யந்த ரொட்ரிகோ தனது ஆள்களை உட்சேர்க்கிறார். இந்த மாற்றங்கள் மத்தியில் சாம் பொன்னையா குருமுதல்வராய் விலகியபோது, பரி. தோமா கல்லூரிக்கு குரு பதவிபெற்று 31.12.2021 வெளியேற, பரி. யோவான் கல்லூரி நிர்வாகி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டது.

ஆனால் திருச்சபையில் வெற்றிடம் ஒன்று ஏற்படும் போது அது வெளியில் சொல்லப்படுவது இல்லை. அதை அதிகாரத்திலுள்ளவர்கள் தமக்குள்ளேயே தீர்மானித்துக் கொள்வார்கள். உதாரணமாக CMS இல் உள்ளவர்கள் யார் என்றும் தெரிவிக்கப்படுவதில்லை. இதனால் யாரையும் போடலாம். சில பழைய மாணவர் நிர்வாகி வெற்றிடத்தைப் பற்றி வினவ தஞ்சா பீரிஸ் குருமுதல்வர் தான் நிர்வாகியாக இருப்பதே பாரம்பரியம் என்று தம்மை கடத்திவிட்டதாக சில பழைய மாணவர் நொந்தனர். தஞ்சா பீரிஸ் சொன்னது பொய். ஏனெனில் வைத்திய கலாநிதி வேதநாயகமும், திரு. து. ஹன்டி இருவரும் குருமுதல்வர்களல்லர். எனினும் வருஷக்கணக்காக நிர்வாகிகளாக இருந்தனர் என்று அவர்கள் காட்டி அங்லிக்கன் திருச்சபையில் தாம் நம்பிக்கை இழந்ததாகக் கூறினர். லண்டன் பழைய மாணவர் சங்கத்திலுள்ள நாம் ஒரு பெயரை முன்வைத்து அத்தியட்சகருக்கும் தஞ்சா பீரிஸிற்கும் எழுத அத்தியட்சகர் நன்றி கூறி பதில் அளித்தார். அதேவேளை பேராசிரியர் ஹூல் வெற்றிடம் பற்றிய கதையை விசாரிக்க, தஞ்சா பீரிஸ் தாங்கள் அப்படி நியமனங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்றும், தாமே அதைத் தீர்மானிப்பார் கள் என்றும் கூறினார். அதற்கு பேராசிரியர் ஹூல் கடும் எதிர்ப்பை அத்தியட்சகருக்கும் தஞ்சா பீரிஸிற்கும் தெரிவித்தார்.

நீங்கள் உண்மையாகவே திறமைசாலிகளை நியமிக்க தேடுகிறீர்கள் என்றால், ஒன்றில் வெற்றிடங்களை விளம்பரப்படுத்த வேண்டும் அல்லது பங்குதாரரை தமக்குத் தெரிந்த திறமைசாலிகளை நியமிக்க கேட்க வேண்டுமென்றும், இதுவே கௌரவமான, நேர்மையான வழி என்றும் கூறி இருந்தார் என்பதை நான் அறிவேன்.

ஏதும் பேசாமல் சடுதியாக கொழும்புவாழ் கலாநிதி டனன் சேனாதிராஜா பரி.யோவான் கல்லூரி நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளார் என யாழ் பழைய மாணவர் சங்கத்தினூடாக நாம் அறிவுறுத்தப்பட்டோம்.

மேலால் பார்க்கும் போது நான் சந்தோஷப்பட்டேன். ஏனெனில் அவர் World Vision என்ற நிறுவனத்தின் தலைமை அதிகாரி. அவர் World Vision ஐ சேரும் போதே பத்திரிகைகளில் கூறப்பட்டவை. அவர் ஒரு சட்டத்தரணி. CIMA Fellow, சட்டக் கல்லூரியில் விரிவுரையாளர், St Andrews Theological University India இலிருந்து கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

யார் கேள்வி கேட்பார்கள்? காலம் போக, சில யோசனைகள் மனதில் எழுந்தன. சட்டத்தரணி என்றால் பல்கலைக்கழகத்தில் படித்து LLB பட்டம் பெற்றவரா அல்லது சட்டக்கல்லூரியில் தொழில்முறை பயிற்சி பெற்றவரா? LLB பட்டம் உண்டென்றால் சொல்லி இருக்கமாட்டாரா?

மேலும் கல்லூரி நிர்வாகி ஓர் அங்லிக்கன் ஆக இருப்பது வழக்கம். ஆனால் சேனாதிராஜா தானே ஒரு சபையை வைத்து நடத்துகிறார். அச்சபையின் இறையியல் மறுபடி பிறக்கும் கிறிஸ்தவம் பற்றியது. (Born Again Christianity) அவர்களின் படி நாம் எந்த நாள், எந்த நிமிஷம் கிறிஸ்தவர் ஆகினோம் என்று சொல்ல முடியுமானால் தான் நாம் கிறிஸ்தவர்கள் (இதைப்பற்றிய சேனாதிராஜாவின் பிரசங்கத்தை youtube பதிவுகளில் காணலாம்). என்னைப்போன்ற கிறிஸ்தவர்கள், அதாவது கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையினர் இப்படியான புதுக்கோயில்களில் பாவமன்னிப்பை பெற்று புதுப்பிக்கப்படுபவர்கள் தான் மறுபடி பிறந்தவர்கள் என்ற மாற்றுச்சிந்தனையை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். சேனாதிராஜா போன்றவர்களே எமது மரபுவழி அங்கிலிகன் போன்ற சபைகளின் எண்ணிக்கை வீழ்ச்சிக்கு காரணம். ஏனெனில் இவர்கள் எம்மக்களை தத்தம் புதிய சபைகளுக்கு மாற்றுகிறார்கள். இது பொருத்தமா? இதை அங்கிலிகன் மரபு அத்தியட்சகர் யோசித்துள்ளாரா?

அதேவேளையில் சேனாதிராஜாவின் கலாநிதி பட்டத்தைக் கிண்டவேண்டி நேரிட்டுள்ளது. St Andrews Theological University India என்ற அமைப்பு அதனை வழங்கியுள்ளது. அதன் இணையத்தளத்திற்கு சென்றால் விடயம் புரியும்.

இதேவேளை கவலைக்கிடமாக பரி. யோவான் கல்லூரி பல்கலைக்கழக அனுமதியில் தரவீழ்ச்சியை கண்டுள்ளது. முதல் தடவையாக பெற்றோர் 5 ஆம் வகுப்புச் சோதனையில் சித்தியடைந்தால் இந்துக் கல்லூரிக்கு மாறும் திட்டங்களைப் பற்றி பேசுகிறார்கள். அந்த கட்டணம், இந்தக்கட்டணம் என்று அரச ஊழியர்களுக்குக் கூட கட்டமுடியவில்லை. படிப்பை விட பிழையாய் பாடத்திட்டத்திற்கு அப்பாலான காரியங்களிலேயே கல்லூரியின் வலியுறுத்தல் உள்ளது என்பதே பல பெற்றோரின் முறைப்பாடு.

இவ்வளவு காலமும் பரி.யோவான் கல்லூரி நிர்வாகிகள் யாழ்ப்பாணத்திலேயே வசித்தனர். ஒரு கிழமைக்கு பலதடவை கல்லூரிக்கு வந்து மேற்பார்வையிட்டனர். கல்லூரி அதிபர் பழைய மாண வரின் பங்கை குறைக்கிறார் என்றும் முறைப்பாடுகள் பல உள்ளன. கலாநிதி சேனாதிராஜா கொழும்பில் வசித்துக் கொண்டு தனது சிரமம் மிக்க World Vision வேலையையும் செய்து அதேவேளை அக்கல்லூரியையும் திறம்பட மேற்பார்வையிடுவாரா? அல்லது யாழ்ப்பாணத்தின் வி டயமும் வைராக்கியமும் நிறைந்த கலாச்சார குணாதிசயத்தை கெடுத்து, பெரிய நிறுவனங்களில் நடப்பது போல படிக்காமல் பெறும் உயர்பட்டங்களை வைத்து கல்லூரி மாணவருக்கு ஷோ காட்டி, மாணவரையும் ஷோ காட்டப் பழக்கி ஒரு போலிக் கொழும்பாக மாற்றி விடுவாரா?

காலைக்கதிர் Kalaikkathir

# தொடர்ந்தும் நாட்டின் தலைவராக செயற்படத் தகுதியற்றவர் கோட்டா!

அரசியல் கட்சிகளின் வழி நடத்தல் இன்றி வீதியில் இறங்கி போராடும் மக்கள் ஜனாதிபதி பதவி விலகி வீட்டுக்கு செல்லவேண்டும்என்றேகோருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதனால், அமைச்சரவையை மாற்றியமைப்பதன் மூலமோ அனைத்து கட்சிகள் இணைந்த கூட்டு அரசாங்கம் என்ற நாடகம் மூலமோ நெருக்கடிக்குத் தீர்வுகாண முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடைக்கால அரசாங்கமோ அல்லது வேறு அரசியல் நாடகங்களோ தொடர்ந்தும் செல்லுப்படியாகா



அநுரகுமார காட்டம்

என்பதால், மக்களின் கோரிக்கைக்கு தலை வணங்கி, ஜனாதிபதி உடனடியாக பதவி விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் வீதியில் இறங்க முடியாத நபர் தொடர்ந்தும் நாட்டின் தலைவராக செயற்பட தகுதியில்லை எனவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## மத்தியவங்கி ஆளுநரும் பதவியை இராஜினாமா!



கொழும்பு, ஏப். 05

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பதவியை இராஜினாமா செய்கிறேன் என அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று (திங்கட்கிழமை) தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் இராஜினாமா செய்துள்ள சூழலில், தான் ஆளுநர் பதவியை இராஜினாமா செய்துள் ளார் என அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

## இராணுவ பஸ்ஸுக்குத் தீ வைத்தவர் யார்? பொதுமக்களின் உதவியை நாடிய பொலிஸ்

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானா இல்லத்திற்கு முன்னர் இடம்பெற ஆர்ப்பாட்டத்தின் போது இராணுவத்தினர் வந்த பஸ்ஸுக்கு தீ வைத்த இருவர் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்.

இவர்கள் இருவர் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் தமக்கு அறியத்தருமாறு அவர்கள் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

அவ்வாறு இவர்கள் தொடர்பான தகவல் ஏதாவது தெரிந்திருந்தால் 071 8591755, 0718594929, 0112 444265 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத்தருமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

## மட்டக்களப்பிலும் ஆர்ப்பாட்டங்கள்










மட்டக்களப்பிலும் நேற்று மாலை பல்வேறு இடங்களில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, இலங்கைத் தமிழரசு வாலிபர் முன்னணித்தலைவர் கி.சேயோன், மாநகரசபை உறுப்பினர்கள், இளைஞர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய பீட மாணவர்களினால் மட்டக்களப்புப் பொலிஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேபோன்று மட்டக்களப்பு இளைஞர்களின் ஏற்பாட்டில் காந்திப் பூங்கா முன்றிலிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்லடிப்பாலத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் பேரணியாக ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு நகர் வழியாக வாவிக்கரை வீதி 1இல் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக் குழுத் தலைவருமான சி.சந்திரகாந்தனின் (பிள்ளையானின்) அலுவலகத்தை முற்றுகையிட்டு சாத்வீகமான முறையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## கிளிநொச்சியில் எரிபொருளை பெறுவதற்கு பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் வருகை

கிளிநொச்சி நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் வருகை தந்து மண்ணெண்ணெய் பெற்று செல்கின்றனர் என முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் இதுதொடர்பில் கருத்து வெளியிடும் போது, டீசல் பெற்றுக் கொள்ள வந்தோம். இருந்தும் கிடைக்கவில்லை. அதனால் காத்திருக்கின்றோம். ஆனால் கிளிநொச்சி பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதிகளவான எரிபொருள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.- எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மக்களுக்குத் தேவையான எரிபொருளை போதுமான அளவில் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதாக கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாமல் ராஜபக்ஷவின் மனைவி நாட்டைவிட்டு வெளியேற்றம்!

### ஆங்கில ஊடகம் தகவல்

நாமல் ராஜபக்ஷவின் மனைவி லிமினி ராஜபக்ஷ மற்றும் அவரது பெற்றோர்கள் இலங்கையைவிட்டு வெளியேறியுள்ளனர் எனக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஞாயிற்றுக்கிழமை காலை நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என அந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

லிமினி ராஜபக்ஷவும் அவரது பெற்றோரும் தீவை விட்டு வெளியேறியுள்ளனர் எனவும், அவர்கள் எந்த நாட்டிற்கு சென்றனர் என்ற தகவல் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மற்ற இரு மருமகள்களும் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## ஆளுநங்கட்சியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்காலையில் பொலிஸாரின் தடையை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் இல்லத்தை முற்றுகையிட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகேவின் வீட்டுக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் கண்டியிலுள்ள வீட்டுக்கு முன்னாலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் மாத்தறை வீட்டுக்கு முன்பாகவும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவின் பொலனறுவை வீட்டுக்கு அருகிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, பத்தரமுல்லை, மாதிவெல பிரதேசத்தில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகப்பூர்வ இல்லமும் நேற்றிரவு மக்களால் சுற்றிவளைக்கப்பட்டது.

மேற்படி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற பகுதிகளில் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசி மக்களைக் கலைத்தனர்.

- - - - - - - - - - - - - - - -

## மஹிந்தர் உள்ளிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த அனைவரையும் எதிர்வரும் 8ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- - - - - - - - - - - - - - - -

## இ.தொ.காவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்தப்பில் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மலையகப் பல்கலைக் கழகம், தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள விவகாரம், உதவி ஆசிரியர் நியமனம் குறித்து கலந்துரையாடப்பட்டது என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

- - - - - - - - - - - - - - - -

## கோட்டாபய உடனடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டு மக்கள் கொந்தளித்துள்ள நிலையில், அதனைச் சமாளிப்பதற்காக அமைச்சரவையில் அமைச்சர்கள் அனைவரும் இராஜிநாமா என்ற நாடகம் அரங்கேற்றப்படுகின்றது. இது மக்களுக்கும் தெரியும்.

கோட்டா அரசால் முன்வைக்கப்படும் இடைக்கால அரசு, இடைக்கால சர்வகட்சி அரசு என்பவற்றை ஏற்பதற்கு எமது கட்சி தயார் இல்லை. கோட்டாபய ராஜபக்ஷவும், அரசும் பதவி விலக வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை. அதனை இந்த அரசு செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்த பின்னர் அடுத்த கட்டம் பற்றி தீர்மானம் எடுக்கலாம். அதற்கான உரிய திட்டம் எம்மிடம் உள்ளது - என்றார்.

- - - - - - - - - - - - - - - -

## கோட்டா அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி செயலகம், காலிமுகத்திடல், அலரி மாளிகை பகுதிகளில் நேற்றிரவு பெருமளவிலான மக்களின் பங்கேற்புடன் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இதனால் அந்தப் பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

நாட்டின் சில பகுதிகளில் பிரதான வீதிகளை மறித்தும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக முன்றிலிலிருந்து பரமேஸ்வரா சந்திக்குப் பேரணியாகச் சென்ற மாணவர்கள் அங்கிருந்து யாழ். நகருக்குச் சென்றனர்.

இதேவேளை, கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொம்மாந்துறையிலிருந்து எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்ட பல்கலைக் கழக மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவாயிலுக்கருகில் வீதியை மறித்து போராட்டத்தில ஈடுபட்டனர்.

கோட்டாபய அரசுக்கு எதிராக மாத்தளை நகரிலும் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாத்தளை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து பொகவந்தலாவை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக பொகவந்தலாவை நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

இதனிடையே, நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாகவும் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா - கண்டி பிரதான வீதியிலிருந்து பேரணியாகச் சென்ற மக்கள் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அரசுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டம் பண்டாரவளை நகரிலும் முன்னெடுக்கப்பட்டது.

பிரதான வீதியை மறித்து நேற்றுக் காலை முதல் பண்டாரவளை நகரில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனிடையே எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பசறை நகரிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கண்டி - திகன நகரிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, அநுராதபுரம், பொலனறுவை, நீர்கொழும்பு, வத்தளை, பொரளை, மருதானை உள்ளிட்ட பகுதிகளிலும் கோட்டாபய அரசுக்கு எதிராக நேற்று மாபெரும் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதே நேரம் தலைநகர் கொழும்பிலும் பிற இடங்களிலும் அமைச்சர்கள் மற்றும் அரசுத் தரப்பு எம்.பிக்களின் இல்லங்களைத் தேடிச் சென்று தாக்குதல் நடத்த முற்படும் மக்கள் கூட்டத்தைத் தடுக்கும் நடவடிக்கையில் பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் ஈடுபட வேண்டி இருப்பதாக ஆங்காங்கே இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலநறுவையில் அரசுத்தரப்பு எம்.பியும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ரொஷான் ரணசிங்கவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்த முயன்றவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகம் செய்தனர்.

இதேபோல பிலியந்தலையில் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான காமினி லொக்குகேயின் இல்லத்தின் மீதும், கண்டியில் கெஹெலிய ரம்புக்வெல எம்.பியின் இல்லத்தின் மீதும் தாக்குதல் நடத்த முயன்றவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் குண்டு வீச்சை நேற்றிரவு மேற்கொண்டனர் எனத் தகவல்கள் வெளியாகின.

பல்வேறு இடங்களிலும் இவ்வாறு அரசுத் தரப்பினரின் இல்லங்கள் மீது தாக்குதல் நடக்கும் முயற்சிகள் பற்றிய செய்திகள் நேற்றிரவு வெளியாகின.

# கோட்டா வீட்டுக்குச் செல்லுங்கள் என வலியுறுத்தி வவுனியாவில் இளையோர் வீதி மறியல் போராட்டம்




(வவுனியா நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக் குச் செல்லுமாறு தெரிவித்து இளையோர் மற்றும் வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன் பாக கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியவாறும், பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பதாதைகளை ஏந்தியவாறும் போராட்டம் இடம்பெற்றது. அத்துடன் போராட்டக்காரர்கள் ஏ - 9 வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிது நேரம் ஏ - 9 வீதியை மறித்துப் போராடிய அவர்கள் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாது பின்னர் பிரதான வீதியில் இருந்து விலகிச் சென்று வீதியோரத்தில் நின்று கோட்டா வீட்டுக்குச் செல்லுங்கள் எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அப்பகுதியில் நின்ற இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவர் மதுபோதையில் போராட்டக்காரர் மீது அருகில் இருந்த வெற்றிலைக் கடையில் இருந்து பெட்டி ஒன்றைத் தூக்கி வீசினார். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளையோர் அவருடன் முரண்பட்டபோது குறித்த ஊழியர் அங்கிருந்து தப்பியோடினார். பின்னர் குறித்த நபர் மீள அங்கு வந்தபோது அவரை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் அவரைக் கடுமையாக எச்சரித்தனர்.

சுமார் ஒரு மணிநேரம் இந்தப் போராட்டம் இடம்பெற்றதுடன், அரசுக்கு எதிராகப் பல கோஷங்களும் எழுப்பப்பட்டன. (100)

# கூட்டமைப்பை உடன் கூட்டுமாறு ரெலோ தலைவர் வேண்டுகோள்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உடனடியாக - அவசரமாக இன்று செவ்வாய்க் கிழமை கூட்டுமாறு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் மூலம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைக் கோரியுள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் இடையேயான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நீண்ட காலமாக நடைபெறவில்லை. தற்போதைய அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு முடிந்தளவு விரைவாக - 5ஆம் திகதி - அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி ஒழுங்கு செய்யுமாறு வேண்டுகிறேன்" - என்று கோரும் கடிதம் ஒன்றை செல்வம் அடைக்கலநாதன் சம்பந்தனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அமைச்சரவை ஒன்றை உருவாக்குவது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவிப்பு வெளியிட்ட சமயத்தில் இந்தக் கடிதம் செல்வம் அடைக்கலநாதனிடமிருந்து சம்பந்தனுக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.பல்கலை கல்வி நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

## விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று காலை இடம்பெற்ற பீடாதிபதிகள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, மாணவர் நலன் கருதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதுடன், விடுதிகளில் தங்கிநிற்கும் மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், பரீட்சை மற்றும் அத்தியாவசிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக மருத்துவ பீடத்தின் இறுதி வருட மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் உள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், மாணவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளுக்கமைய விடுதிகளை விட்டு வெளியேறுவதற்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - - -

## பெரும்பான்மையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதன்படி பெரும்பான்மையை நிரூபிக்க எதிரணிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

அதேவேளை, இந்தச் சந்திப்பில் பங்கேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான சாமர சம்பத், ரணில், அநுர என எவர் பிரதமரானாலும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

# இடைக்கால அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி!

## ஆதரவும் வழங்கமாட்டோம் எனவும் திட்டவட்டம்

இடைக்கால அரசில் அங்கம் வகிக்க மாட்டோம்; அதற்கு ஆதரவும் வழங்க மாட்டோம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அரசுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கும், உள்ளக மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், மக்களை ஏமாற்றுவதற்காகவுமே இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இடைக்கால அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று விமல் வீரவன்ஸ நேற்று அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இடைக்கால அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இடைக்கால அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

# பொகவந்தலாவையில் பாரிய ஆர்ப்பாட்டங்கள்




கொழும்பு, ஏப்.05

நாட்டின் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம் மற்றும் டீசல், மண்ணெண்ணெய் தட்டுபாடு போன்றவற்றுக்கு எதிராகவும் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தியும் பொகவந்தலாவை நகரில் நேற்று (திங்கட்கிழமை) பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேறுமாறு கோஷங்கள் எழுப்பி பதாதைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிந்ருது.

இதன்போது, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்த ஆர்ப்பாட்டத்தில் அப்பகுதியில் உள்ள சில தோட்டங்களைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடதக்கது.

# அமெயிலுள்ள கோட்டாவின் மகனின் வீட்டுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஏப் 05

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மகனின் வீட்டுக்கு வெளியேயும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள இலங்கையர்கள் சிலரே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது அவரது தந்தையை வீட்டிற்கு அழைக்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோமிட்டிருந்தனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்க அரச பங்காளிகளுக்குச் சஜித் அணி அழைப்பு



அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இதனைத் தோற்கடிக்க ஆளுங்கட்சியில் இருந்துகொண்டு புரட்சி செய்யும் 11 கட்சிகளும் முன்வர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் அமுலில் இருக்கும் காலத்தின் பின்னர் அந்தச் சட்டத்தை நீடிப்பதற்கு ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து அதை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும்போது தேசிய மக்கள் சக்தியும் இதற்கு எதிராக வாக்களிக்கும் என அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்ற உறுப்பினர்களின்

# வீடமைப்புத் தொகுதிக்கு அதிவிசேட பாதுகாப்புகள்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதிவெலயிலுள்ள வீடமைப்புத் தொகுதியின் பாதுகாப்புக்கெனப் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு மேலதிகமாக இந்த வீடமைப்புத் தொகுதிக்கு அருகில் புலனாய்வுப் பிரிவினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பாதுகாப்புப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடை பெறுகின்றது.

# அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே வாக்களிப்பேன்

## ஆளுங்கட்சி எம்.பி. சந்திம உறுதி



நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே வாக்களிப்பேன்.

– இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி அறிவித்தார்.

நாட்டில் தற்போது போர் இல்லை. எனவே, ஜனநாயகத்தை ஒடுக்க அவசரகால சட்டம் பயன்படுத்தப்படுவது தவறு எனவும் ஊடகங்களிடம் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அனுரபிரியதர்ன யாப்பாவும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

# சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயும் இராஜாங்க அமைச்சிலிருந்து விலகல்!

கொழும்பு, ஏப் 05

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, தனது இராஜினாமா கடிதத்தை நேற்று (திங்கட்கிழமை) ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக அவர் பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால அரசுக்கான களத்தை ஏற்படுத்துங்கள்!

## கோட்டாவிடம் விமல் வேண்டுகோள்



அதிருப்தியில் உள்ளாகியுள்ள முழு நிர்வாகத்தையும் நீக்கிவிட்டு, இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான களத்தை அமைக்குமாறு விமல் வீரவன்ஸஎம்.பி. ஜனாதிபதியிடம்கோரிக்கை விடுத்துள்ளார்.

11 அரசாங்க பங்காளிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய கூட்டத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேவலமான ஆட்சியை அகற்றி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் இந்த நாட்டில் இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்துமாறு, ஜனாதிபதியிடம் இன்று மீண்டும் தாங்கள் வலியுறுத்துகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2022இல் வெளியிடப்பெற்றது.

# கோட்டா! வீட்டுக்குப் போ!!

★யாழில் நேற்று முழங்கிய பல்கலைக்கழக மாணவர்கள்
★பேரணியாக மாறியது போராட்டம்
★டக்ளஸின் அலுவலகமும் முற்றுகை











